# Government of Tamilnadu

## IV STANDARD

## TERM I

TAMIL

ENGLISH

MATHEMATICS

SCIENCE

SOCIAL SCIENCE

**Untouchability
Inhuman - Crime**

## Department of School Education

A Publication Under
Government of Tamilnadu
Distribution of Free Textbook Programme
(NOT FOR SALE)

© Government of Tamilnadu
Fist Edition - 2012
(This book is published under Uniform System of School Education Scheme in Trimester Pattern)

Textbook Prepared and Compiled by
Directorate of Teacher Education Research and Training,
College Road, Chennai - 600 006.

Wrapper Design
A. Kasi Viswanathan
Selam.

Book Design
R. Raja, Gudalur-625518.
S. Sivakumar Srinesh, Annanur-Chennai.

Textbook Printing
Tamilnadu Textbook Corporation
College Road, Chennai - 600 006.

This has been printed on 80 G.S.M Maplitho Paper

Price : Rs.

Printed by Offset at :

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

### SHORT VERSION

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

## AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature

# CONTENTS

## தமிழ் 1 - 36


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | மெய் சொல்லல் நல்லது (பாடல்) | 3 |
| 2. | இயற்கை (படம்) | 5 |
| 3. | பெரியாரைத் துணைகொள் ... | 8 |
| 4. | வழங்கும் தமிழ் | 12 |
| 5. | விண்ணப்பம் எழுதுவோம் | 16 |
| 6. | இறகும் இலையும் ஒன்று | 19 |
| 7. | பொம்மை உலகம் | 24 |
| 8. | திருக்குறள் | 30 |
| 9. | சின்னராசா கண்ணுறங்கு! (தாலாட்டு) | 34 |
| 10. | அகரமுதலி | 36 |


## ENGLISH 37 - 76


| S.No. | Title | Page No. |
|---|---|---|
| 1. | Little Tuppen | 39 |
| | Living Together | 50 |
| 2. | All About Me | 52 |
| | Paper Boats | 62 |
| 3. | Say Yes To Yelagiri | 65 |
| | Trains | 74 |

## MATHEMATICS 77 - 148

| S.No. | Title | Page No. |
|---|---|---|
| 1. | Around You | 79 |
| 2. | Knowing Numbers | 95 |
| 3. | Addition And Subtraction | 112 |
| 4. | Measuring Length | 127 |
| 5. | Weighing Objects | 137 |

## SCIENCE 149 - 208

| S.No. | Title | Page No. |
|---|---|---|
| 1. | Food from Plants | 151 |
| 2. | Special senses of animals | 162 |
| 3. | Insects | 176 |
| 4. | Visit to a Farm | 188 |
| 5. | Human Body | 198 |

## SOCIAL SCIENCE 209 - 255

| S.No. | Title | Page No. |
|---|---|---|
| 1. | Wonders in the sky | 211 |
| 2. | Home planet | 218 |
| 3. | Earth's gift | 227 |
| 4. | An elephant speaks | 236 |
| 5. | The freedom struggle | 245 |

# தமிழ்

## நான்காம் வகுப்பு

## முதல் பருவம்


பாடநூல் குழு
குழுத்தலைவர்

முனைவர் சி. கதிர்வேல்,
மேனாள் முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி.

மேலாய்வாளர்கள்

வே. பதுமனார், மேனாள் முதுகலைத் தமிழாசிரியர், திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி, குடியேற்றம், வேலூர்.

செ. இராஜா, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,திருமூர்த்தி நகர், திருப்பூர் .

வல்லுநர்கள்

எ. முத்துக்கிருஷ்ணன்,
(மேனாள் கல்விப் பேரவைக்குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழகம்)
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

த. தனுஷ்கோடி,
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம்.

க. சு. சங்கீதா,
உதவிப் பேராசிரியர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம், சென்னை–6.

நூலாசிரியர்கள்

அ. கருப்பையா, தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பூவரசகுடி, புதுக்கோட்டை.

முனைவர் அ. கிருஷ்ணமூர்த்தி, பட்டதாரி ஆசிரியர், நாடார் மகமை மேனிலைப் பள்ளி, ஏழாயிரம் பண்ணை.

ந. முத்து, தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கண்ணுக்காரன்பட்டி, தருமபுரி.

சீ. திருமுருகன், இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தாண்டாம்பாளையம், ஈரோடு .

செ. சிவநேசன், மேனாள் தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, தெ. நெடுஞ்சேரி, கடலூர் .

பா. ச. குப்பன், இடைநிலை ஆசிரியர், வள்ளுவர் நடுநிலைப்பள்ளி, திருநாகேச்சரம், குன்றத்தூர், காஞ்சிபுரம்.

ஓவியம் : அரஸ் வடிவமைப்பு : எஸ்.மாரீஸ்

| திறன் பகுதி | திறன் | பாட எண் |
|---|---|---|
| கேட்டல் | 1. ஓசைநயமிக்க கருத்துப் பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளல்.<br>2. நாட்டுப்புறக் கதைகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளல்.<br>3. சூழ்நிலையில் உற்றுக்கேட்ட விவரங்களைப் புரிந்து கொள்ளல். | 1<br>3<br>4 |
| பேசுதல் | 1. தங்குதடையின்றிப் பேசுதல்.<br>2. வருணனை கலந்து பேசுதல். | 2<br>6 |
| படித்தல் | 1. கதைகளை நிறுத்தக்குறிகளுக்கு ஏற்பப் படித்தல். | 3, 6 |
| எழுதுதல் | 1. சொல்லக் கேட்டுப் பிழையின்றி எழுதுதல்<br>2. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை கூறுதல்.<br>3. புதிர்களை எழுதுதல்.<br>4. விடுப்புக் கடிதம் எழுதுதல். | அனைத்தும்<br>7<br>6<br>5 |
| படைப்பாற்றல் | 1. படம் பார்த்து வருணித்து எழுதுதல்.<br>2. படத்தொகுப்பு உருவாக்குதல். | 2<br>2 |
| நடைமுறை இலக்கணம் | 1. திணை வேறுபாடுகளை அறிதல்<br>2. காலங்கள் அறிதல் | 3<br>6 |
| தானே கற்றல் | 1. சிறுசிறு கதைகளைப் படித்தல்.<br>2. அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருளறிதல். | 3, 6<br>அனைத்தும் |
| சொல்லாட்சித் திறன் | 1. சொற்களஞ்சியம் பெருக்குதல். | அனைத்தும் |

# 1. மெய் சொல்லல் நல்லது



மெய் சொல்லல் நல்லதப்பா – தம்பி
மெய் சொல்லல் நல்லதப்பா..... !
கண்டதைச் சொல்லென்று சொன்னாலும் – நீ
உண்டதைச் சொல்லென்று சொன்னாலும்
மண்டை உடைத்திட வந்தாலும் – பொருள்
கொண்டு வந்துன்னிடம் தந்தாலும்
மெய் சொல்லல் நல்லதப்பா – தம்பி
மெய் சொல்லல் நல்லதப்பா..... !
பின்னவன் கெஞ்சியும் நின்றாலும் – அன்றி
முன்னவன் அஞ்சிட நின்றாலும்
மன்னவரே எதிர் நின்றாலும் – புலி
தின்னவரேன் என்று சொன்னாலும் – நீ
மெய் சொல்லல் நல்லதப்பா – தம்பி
மெய் சொல்லல் நல்லதப்பா..... !

– பாவேந்தர் பாரதிதாசன்

சிறப்புப் பெயர் : பாரதிதாசன் இயற்பெயர் : கனக. சுப்புரத்தினம்
ஊர் : புதுச்சேரி பெற்றோர் : கனகசபை - இலட்சுமி
காலம் : 29. 04. 1891 - 21. 04. 1964
இயற்றிய நூல்கள் : சஞ்சீவி பர்வதத்தின் சாரல், இசையமுது, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, இருண்டவீடு, குடும்ப விளக்கு.

## பயிற்சிகள்

அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. மெய் ________________
2. பொருள் ________________
3. அஞ்சி ________________
4. மன்னவர் ________________

ஆ) பிரித்து எழுதுக.

1. நல்லதப்பா ________________
2. சொல்லென்று ________________
3. வந்துன்னிடம் ________________

இ) எதிர்ச்சொல் எழுதுக.

1. மெய் X ________________
2. அஞ்சி X ________________

ஈ) முதல் எழுத்தை மாற்றி வேறு சொற்களை எழுதுக.

சங்கு ________ ________ ________
தம்பி ________ ________ ________

உ) இப்பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வந்துள்ள சொற்களை எடுத்து எழுதுக.

(எ.கா.) கண்டதை ________ ________
உண்டதை ________ ________

ஊ) 'அரசன்' என்னும் பொருள்தரும் வேறு சொற்களை எழுதுக.

(எ.கா.) கோ ________ ________

எ) விடை எழுதுக.

உண்மையே சொல்லவேண்டும் எனப் பாவேந்தர் பாரதிதாசன் கூறுவனவற்றை எழுதுக.

# 2. இயற்கை



## பயிற்சிகள்

**அ) படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடை கூறுக.**

1. படத்தில் காணப்படும் பறவைகள் யாவை ?
2. ஆற்றங்கரையில் காணப்படும் விலங்குகள் யாவை ?
3. வண்ணத்துப் பூச்சிகள் என்ன செய்கின்றன ?
4. முயல்கள் என்ன செய்கின்றன ?

**ஆ) படத்தில் உள்ள விலங்குகளில் 'ம' வரிசையில் அமையும் உயிரிகளின் பெயர்களை எழுதுக.**

__________ __________ __________

__________ __________ __________

தமிழ்

இ) படத்தில் உள்ள விலங்குகள் செய்யும் செயல்களை எழுதுக.

(எ.கா.) மான், நீர் குடிக்க வருகிறது.

______________________________________

______________________________________

______________________________________

ஈ) படத்தில் உள்ள பறவைகள், விலங்குகள் தவிர, வேறு விலங்குகளின் பெயர்களை எழுதுக.

______________________________________

______________________________________

உ) நீரில் வாழும் உயிரிகளின் பெயர்களை எழுதுக.

______________________________________

______________________________________

ஊ) உனக்குத் தெரிந்த மரங்களின் பெயர்களை எழுதுக.

______________________________________

______________________________________

______________________________________

எ) பொருத்தமான விடையை எடுத்து எழுதுக.

( மேல், மேய்கிறது, கிளையில், குறுக்கே, சிறகடித்துப் )

1. வண்ணத்துப்பூச்சி ____________ பறக்கிறது.

2. மான், புல்லை ____________.

3. மீன்கொத்தி மரக்____________ உள்ளது.

4. பாலம், ஆற்றின் ____________ உள்ளது.

5. மீன், நீருக்கு ____________ துள்ளுகிறது.

ஏ) விலங்குகளையும் அவற்றின் உணவுகளையும் பொருத்தி எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| அணில் | – | பூந்தேன் | அணில் பழங்கள் |
| மான் | – | மீன் | |
| வண்ணத்துப்பூச்சி | – | பழங்கள் | |
| மீன்கொத்தி | – | தவளை | |
| பாம்பு | – | புல் | |

ஐ) வருணித்து எழுதுக.

(எ.கா.)



முயல் வெள்ளை நிறத்தில் இருக்கிறது.
அது குதித்துக் குதித்து ஓடும். அதன் இரண்டு காதுகளும் இலை போன்று பெரிதாக இருக்கும்.






விளையாடலாம் வாங்க!

எவையேனும் பத்து விலங்குகள், பறவைகள், பூக்களின் பெயர்களைத் தனித்தனியாகத் துண்டுத் தாளில் எழுதிச் சுருட்டிக் கொள்க. மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரு துண்டுத் தாளை எடுக்கச் செய்க. அத்தாளில் எழுதி உள்ளதைப் பற்றிப் பேசச் செய்க.

**செயல் திட்டம்**

விலங்குகள், பறவைகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு அமைக்க.

# 3. பெரியாரைத் துணைகொள்



வேங்கை நாடு ஓர் அழகான நாடு. அந்நாட்டை வேங்கை மார்பன் என்னும் மன்னன் ஆண்டு வந்தார். அவர் வயதில் இளையவர். 'இளைஞர்களால் நாடு முன்னேறும்; முதியவர்களால் நாட்டுக்குப் பயன் ஒன்றும் இல்லை' எனக் கருதினார்.

அவர், தலைமை அமைச்சரை அழைத்து, "முதியவர்களால் நாட்டுக்குப் பயன் ஒன்றும் இல்லை. அவர்கள் நாட்டுக்குச் சுமைதான். அவர்களை நாடு கடத்தி விடுங்கள்" என்று ஆணையிட்டார்.

இதனைக் கேட்ட தலைமை அமைச்சர் அதிர்ச்சி அடைந்தார்! 'முதியவர்களால் பயன் ஒன்றும் இல்லையா? அவர்கள் நாட்டிற்குச் சுமையா? அவர்களின் பட்டறிவு நாட்டிற்குத் தேவை அல்லவா! ஆனால், இது அரசனின் ஆணை என்று தனக்குள் நினைத்தார். ஆதலால், "அப்படியே செய்கிறேன், அரசே!" என்று கூறினார்.

அரசரின் ஆணை முரசறைந்து அறிவிக்கப்பட்டது. நாடெங்கும் ஒரே பரபரப்பு. மக்கள் அனைவரும் மிகுந்த வருத்தத்தோடு முதியவர்களை அண்டைநாடுகளுக்கு அனுப்பினர். ஆனால், மதிவாணன் என்னும் இளைஞன், வயதான தன் தந்தையின்மீதுகொண்ட அன்பால், அவ்வாறு செய்யவில்லை. தன் வீட்டிலேயே மறைவான இடத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தான்.

ஒருநாள், வேங்கைநாட்டு அரசவைக்கு விருந்தினராக ஓர் அறிஞர் வந்தார். அவர் பெயர் செழியன். மன்னர் அவரை அன்புடன் வரவேற்றார்; அவையில் இடமளித்தார். அறிஞர் செழியன் அவையினரைப் பார்த்து, "இந்நாட்டில் நான் சொல்வதனைச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர் எவரேனும் உண்டா?" என்று வினா எழுப்பினார். மன்னர், "அஃது என்ன செயல்?" என்று வினவினார்.

அறிஞர், "சாம்பலைக் கயிறாகத் திரிக்க வேண்டும்; சங்கில் நூலைக் கோத்துத் தரவேண்டும். செய்யமுடியுமா?" என்று கூறி, ஏளனமாகச் சிரித்தார். "சாம்பலைக் கயிறாகத் திரிப்பதா?" என்றார் மன்னர். அதனைக் கேட்ட அவையினரோ, "இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது." என்றனர்.

மன்னர், அவையினரை நோக்கி, "யாரேனும் இச்செயலைச் செய்து காட்ட முடியுமா?" என்று வினவினார்; எல்லாரும் அமைதி காத்தனர்.

மன்னர், புதிதாக வந்த அறிஞரிடம், "இரண்டு நாள் பொறுங்கள்; நீங்கள் சொன்னதைச் செய்து காட்டுவோம்" என்றார்.

மறுநாள், அறிஞர் கூறிய செயல்களைச் செய்பவருக்கு 'ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கப்படும்' என்று முரசறைந்து அறிவிக்கப்பட்டது.

மதிவாணன், தன் தந்தையிடம் இதைக் கூறினான். தந்தையோ, "இவ்வளவுதானே! நான் சொல்லுகிறபடி செய்து, அதை அரண்மனைக்கு எடுத்துச் செல்" என்றார்.

மறுநாள் மதிவாணன் அரசவைக்குச் சென்றான். ஒரு தட்டில் சாம்பலால் ஆன கயிற்றையும், நூல் கோத்த சங்கையும் வைத்திருந்தான். அவையில் இருந்த அனைவரும் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். "ஆகா! இஃது எப்படி, எப்படி" என்று வியந்தனர்!

மன்னர், ஆயிரம் பொற்காசுகளை மதிவாணனுக்குப் பரிசாக அளித்தார். மன்னர் மதிவாணனைப் பார்த்து, "இதை எப்படிச் செய்தாய்?" என்று கேட்டார்.

மதிவாணன், "அரசே! இது மிகவும் எளிது. ஒரு துண்டுக்கயிற்றைத் தட்டில் வைத்து, அதைத் தீ வைத்துக் கொளுத்தினேன்; தீ அணைந்தபின் சாம்பல் கயிறுபோலக் காட்சி அளித்தது. அதனைக் கலையாமல் கொண்டுவந்தேன்" என்றான். "அதுசரி, சங்கில் நூல் எவ்வாறு ஒருபுறத்தில் இருந்து மறுபுறம் சென்றது?" என்று மன்னர் வினவினார்.

“ஒரு கட்டெறும்பில் மெல்லிய நூலைக் கட்டினேன். சங்கின் எதிர்ப் புறத்தில் கற்கண்டுத் துண்டு ஒன்றை வைத்தேன். எறும்பு தானாகச் சங்கினுள் நுழைந்து கற்கண்டை நோக்கி எதிர்ப்புறம் வந்துவிட்டது. எறும்பை விட்டு விட்டேன்; நூலைக் கோத்துவிட்டேன்” என்றான் மதிவாணன். மன்னர், “நன்று நன்று" எனப் பாராட்டினார்.

மதிவாணன் சிறிது நேரம் அமைதியாக நின்றான். பிறகு, “அரசே! தங்கள் ஆணையை மீறியமைக்காகப் பொறுத்தருளல் வேண்டும். நான், வயதான என் தந்தையை யாருக்கும் தெரியாமல் வீட்டிலேயே வைத்துப் பாதுகாத்து வருகிறேன். அவர்தாம் இந்தச் செயலைச் செய்ய எனக்கு வழிகாட்டினார்” என்றான்.

மன்னர்க்குத் தெளிவு பிறந்தது. ஒருநாடு முன்னேற வேண்டுமானால், இளைஞர்களின் செயல்வேகமும், முதியவர்களின் பட்டறிவும் வழிகாட்டலும் தேவை என்பதை உணர்ந்தார். முதியவர்களால் நாட்டுக்குக் கேடு ஒன்றும் இல்லை என்பதனால், முதியோர் அனைவரும் நாடு திரும்ப மன்னர் ஆணை பிறப்பித்தார்; மக்கள் மகிழ்ந்தனர்.

## பயிற்சிகள்

### அ) அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. ஆணை ______________________
2. அறிஞர் ______________________
3. ஏளனம் ______________________

### ஆ) பிரித்து எழுதுக.

1. அரசாணை ______________________
2. முரசறைந்து ______________________
3. துண்டுக்கயிறு ______________________

### இ) சேர்த்தெழுதுக.

1. பொன் + காசு ______________________
2. கல் + கண்டு ______________________
3. பொறுத்து + அருள்க ______________________

ஈ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அரசர் முதியவர்களை ______________ கடத்திவிடலாம் என்றார்.

2. அரசவைக்கு வந்த அறிஞரின் பெயர் ______________________.

3. சாம்பலைக் ________________________________ திரிக்க வேண்டும்.

4. எறும்பு சங்கின் எதிர்ப்புறம் வர ______________ வைக்கப்பட்டது.

5. நாடு முன்னேற முதியவர்களின் _______________ தேவை.

உ) விடை எழுதுக.

1. மதிவாணன், தன் தந்தையை எங்கே மறைத்து வைத்தான்?
2. வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர் கூறிய செயல்கள் யாவை?
3. அறிஞர் கூறிய செயலைச் செய்பவர்க்கு மன்னர் அறிவித்த பரிசு யாது?
4. சங்கின் எதிர்ப்புறத்தில் கட்டெறும்பு வந்தது எப்படி?
5. சாம்பலில் கயிறு செய்தது எப்படி?
6. மதிவாணன், 'என்னைப் பொறுத்தருள வேண்டும்' என்று ஏன் கூறினான்?

## அறிந்துகொள்வோம்

### திணை

'திணை' என்னும் சொல்லுக்கு 'ஒழுக்கம்' என்பது பொருள். மக்களை உயர்திணை என்றும், மக்கள் அல்லாத பிற உயிர் உள்ளவை, உயிர் அற்றவை அனைத்தும் அஃறிணை(அல்+திணை) என்றும் தமிழ் இலக்கணம் பாகுபடுத்தும்.

உயர்திணை–கண்ணன், தேவி, மன்னன், மக்கள்.

அஃறிணை – குரங்கு, செடி, மீன், கடல், மலை.

பின்வரும் சொற்களை வகைப்படுத்துக.

மரம், பொன்னன், கல், கண்ணகி, தாள், சங்கு, ஆசிரியர், புறா, மருத்துவர்.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

# 4. வழங்கும் தமிழ்



சென்னை வானொலி நிலையத்தில் உள்ள ஒலிப்பதிவு அரங்கிலிருந்து தமிழ்ச்செல்வி வெளியே வந்தாள். வெளியில் காத்திருந்த அவளுடைய பெற்றோர் மகிழ்ச்சியோடு அவளை அணைத்துக் கொண்டனர். 'நன்றாகப் பாடினாய் செல்வி' எனப் பாராட்டினார் தந்தை.

மூவரும் எதிரில் உள்ள மெரினாக் கடற்கரைக்குச் சென்றனர். 'நொச்சிக்குப்பம்' என்னும் பெயர்ப்பலகை அவர்களை வரவேற்றது. அஃது ஒரு மீனவர் குப்பம். அங்கே சிறுசிறு குடிசைகள்; சில்லென்ற கடற்காற்று வீசியது.

அங்கு வாழும் மீனவர் விடியற்காலையிலேயே எழுந்து கடலில் மீன்பிடிக்கச் செல்கின்றனர். கட்டுமரங்களும் விசைப்படகுகளும் வலைகளுமே அவர்களுடைய வாழ்க்கைக்குப் பெருந்துணை. மீனவர்கள் கடலில் பிடித்து வந்த மீன்களை, மீனவப் பெண்கள் கூறு கட்டி விற்கிறார்கள்.

அவர்களது பேச்சுமொழியில் சோறு, குழம்பு, சாறு, மாவுச்சோறு, தட்டம், பானை, அகப்பை, அரிவாள்மணை, சுள்ளி, திரி, மிளகுத் தண்ணீர், வலை, படகு, கட்டுமரம், துடுப்பு, காய்ச்சல், கக்கல், கழிச்சல், மருத்துவச்சி, இராப்பொழுது, கூவுதல், சாயுங்காலம், ஆய்தல், தடி முதலிய தூய தமிழ்ச்சொற்கள் உள்ளன.

அவர்களின் குழந்தைகள் பாண்டி, கோலி, கில்லி, சடுகுடு ஆகிய எளிய விளையாட்டுகளை ஆர்வத்துடன் விளையாடுகின்றனர். கிளிஞ்சல்களை வைத்துப் 'பல்லாங்குழி' என்னும் தமிழர்களின் பண்டைய ஆட்டத்தையும் ஆடுகின்றனர். சிறுசிறு சங்குகளால் ஆன மாலைகளைக் கழுத்தில் விரும்பி அணிகின்றனர்.

மீனவ மக்களுக்கு எப்போதுதான் ஓய்வு? கடல் கொந்தளிக்கும் நாள்களிலும் விடாது மழை பெய்யும் நாள்களிலும் அவர்கள் வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்கிறார்கள். அப்போதும், மீன்பிடி வலைகளையும் கட்டுமரங்களையும் செப்பம் செய்கிறார்கள். குடிசைகளில் வயது முதிர்ந்த பெரியவர்கள் மாலை வேளைகளில், தங்கள் பேரக் குழந்தைகளுக்கு இனிய கதைகள் சொல்லுகிறார்கள்.

ஆடித்திங்கள் முழுநிலா நாளில் கடற்கன்னிக்குப் பொங்கலிடுவார்கள். அன்று முழுவதும் ஆணும்பெண்ணும் சொட்டு நீர்கூட அருந்தாமல் நோன்பு இருப்பார்கள். மாலையில், முழுமதியைக் கண்டபின் பொங்கலைப் படைப்பார்கள். தை முதல்நாள் கொண்டாடப்படும் பொங்கல் திருநாள் அவர்களின் பெரிய திருவிழா ஆகும். 'காணும் பொங்கல்' நாளை அவர்கள் கரும்புத் திருவிழா எனக் கொண்டாடுகிறார்கள்.

ஆவணித்திங்கள் கடைசி ஞாயிறன்று எல்லையம்மன் திருக்கோவிலில் விழா நடத்துவார்கள். விழாவின்போது சிலம்பாட்டம், புலியாட்டம் முதலிய நாட்டுப்புற வீர விளையாட்டுகளை விளையாடுவர். வீட்டுக்கு ஒருவர் பால்குடம் எடுப்பதும் கரகம் எடுப்பதும் அவர்களின் வழக்கமாக உள்ளது.

அவர்களின் குடிசைகளுக்கு அருகில் உயர்ந்து நிற்கிறது கலங்கரை விளக்கம். அதிலிருந்து வெளிவரும் ஒளி, தொலைவிலிருந்து வரும் கப்பல்கள் கரைசேர வழி காட்டுகிறது.



மீனவர், மொழித்தூய்மையும் இன ஒற்றுமையும் கொண்டு வாழ்வது தமிழுக்கும் தமிழினத்திற்கும் பெருமை சேர்ப்பதாக உள்ளது. அவர்தம் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கடுமையான உழைப்பும் அனைவருக்கும் கலங்கரை விளக்கமாய் வழிகாட்டுகின்றது.

மீனவர்களின் வாழ்க்கை முறையை அறிந்து மகிழ்ந்த தமிழ்ச்செல்வியின் குடும்பத்தினர் வீடு திரும்பினர். மீனவர்தம் பேச்சுமுறை, பழக்கவழக்கங்கள், வழிபாட்டுமுறைகளை நினைத்து நினைத்துப் பெருமை கொண்டனர்.

## பயிற்சிகள்

அ) அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. குப்பம் ____________________
2. தட்டம் ____________________
3. சுள்ளி ____________________
4. இராப்பொழுது ____________________

ஆ). பிரித்து எழுதுக.

1. கடற்கரை ____________________
2. பெருந்துணை ____________________
3. கலங்கரை ____________________

இ) கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. மெரினாக் கடற்கரை அருகில் ________________ குப்பம் உள்ளது.
2. கப்பல்கள் கரைசேரக் ______________________ வழிகாட்டுகின்றது.
3. காணும் பொங்கல் மீனவர்களின் ______________ திருவிழாவாகும்.

ஈ) விடை எழுதுக.

1. மீனவர் வாழ்க்கைக்குப் பெருந்துணையாக அமைபவை எவை?
2. மீனவ மக்கள் பேசும் தூய தமிழ்ச்சொற்கள் யாவை?
3. குப்பத்துச் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டுகள் யாவை?
4. ஆடித்திங்களில் மீனவ மக்கள் கொண்டாடும் விழாவை விவரிக்க.

உ) சொற்றொடர் அமைத்து எழுதுக.

1. கடற்கரை ________________________________________
2. விடாமுயற்சி ________________________________________
3. ஒற்றுமை ________________________________________

ஊ) நீ விளையாடும் விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.

__________ __________ __________

__________ __________ __________

__________ __________ __________

எ) உரிய சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புறா __________ தேடுகிறது. (இறை / இரை)
2. கடல் நீரில் __________ எழுகிறது. (அழை / அலை)
3. மல்லிகைப் பூவுக்கு __________ உண்டு. (மனம் / மணம்)
4. ஆற்றில் __________ வருகிறது. (வெல்லம் / வெள்ளம்)

ஏ) உரிய சொல்லை எடுத்து எழுதித் தொடரை நிறைவு செய்க.

கற்பித்தல், மீன், கட்டடம், உழவுத்தொழில், மருத்துவப் பணி

1. மீனவர் கடலில் __________ பிடிப்பர்.
2. உழவர் __________ செய்வர்.
3. மருத்துவர் __________ செய்வர்.
4. கொத்துவேலை செய்பவர் __________ கட்டும் தொழில் செய்வர்.
5. ஆசிரியர் __________ பணி செய்வர்.

**செயல் திட்டம்**

கடலைக் குறிக்கும் வேறு பெயர்களையும்
கடலில் கிடைக்கும் பொருள்களையும் எழுதி வருக.

# 5. விண்ணப்பம் எழுதுவோம்



வீடெங்கும் விழாக்கோலம். இளங்கோவன் வீட்டுக்குள் நுழைந்தான். அவனுடைய அத்தை, மாமா, சிற்றப்பா, அக்காள், தங்கை எல்லாரும் அங்கே கூடியிருந்தார்கள்.

இளங்கோவனின் தாய், "நாளை மறுநாள் திருத்தணியில் நடைபெறும் அக்காள் திருமணத்திற்குச் செல்ல வேண்டும். அதற்காக உனது ஆசிரியரிடம் விடுப்பு வேண்டிப் பெற்று வா" என்றார்.

"வகுப்பாசிரியரிடம் எவ்வாறு விடுப்பு வேண்டிப் பெறுவது ?" என்றான் இளங்கோவன்.

"விடுப்பு விண்ணப்பம் எழுதிப் பெறலாம்" என்றார் தந்தை.

"விடுப்பு விண்ணப்பமா! எப்படி எழுதுவது ? எனக்குத் தெரியாதே!" என்றான் இளங்கோவன்.

"நான் சொல்லித் தருகிறேன்" என்றார் தந்தை.

முதலில், கடிதத்தின் இடப்பக்கம் 'அனுப்புநர்' என்று எழுதி உன் பெயரையும் முகவரியையும் ஒன்றன்கீழ் ஒன்றாக எழுது.

அனுப்புநர்

அ. இளங்கோவன்,
நான்காம் வகுப்பு 'அ' பிரிவு,
நகராட்சி நடுநிலைப்பள்ளி,
சிதம்பரம் – 608 001.

அதன்கீழ், 'பெறுநர்' என எழுதி வகுப்பாசிரியர், பள்ளி முகவரியை எழுது.

பெறுநர்
வகுப்பாசிரியர்,
நான்காம் வகுப்பு 'அ' பிரிவு,
நகராட்சி நடுநிலைப்பள்ளி,
சிதம்பரம் – 608 001.

அதன்கீழ், வகுப்பாசிரியரை விளித்து, மதிப்பிற்குரிய ஐயா / அம்மா என்று எழுது.

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,

பின்னர், விடுப்பிற்கான காரணத்தையும், தேவையான நாள்களையும் தேதியுடன் தெளிவாக எழுது.

என்னுடைய அக்காளின் திருமணம் 25–07–2012 அன்று திருத்தணியில் நடைபெறுவதால், என்னால் பள்ளிக்கு வர இயலாது. எனவே, 24–07–2012, 25–07–2012 ஆகிய இரு நாள்களுக்கு விடுப்பு வழங்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

"அப்பா! நீங்கள் சொன்னபடியே எழுதி விட்டேன்" என்றான் இளங்கோவன். "விண்ணப்பம் எழுதியவர் யார் என்று தெரிய வேண்டாவா? கீழே வலப்பக்க மூலையில் 'தங்கள் உண்மையுள்ள' என எழுதி உன் கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

அதன் எதிரே இடப்பக்கம் இடம், நாள் ஆகியனவற்றைக் குறிப்பிட வேண்டும்.

சிதம்பரம்,
23 .07. 2012.

தங்கள் உண்மையுள்ள,
இளங்கோவன்

இதுவே விடுப்பு விண்ணப்பம் எழுதும் முறை" என்றார் தந்தை. இளங்கோவன் விடுப்பு விண்ணப்பம் எழுதத் தெரிந்து கொண்டமைக்காகப் பெரிதும் மகிழ்ந்தான்.

## பயிற்சிகள்

அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

விளித்து ____________

ஆ) பிரித்து எழுதுக.

1. வீடெங்கும் ____________
2. வகுப்பாசிரியர் ____________
3. கையொப்பம் ____________
4. இடப்பக்கம் ____________

இ) வரிசைப்படுத்துக.

1. கடிதத்தின் வலப்பக்க மூலையில் எழுதுபவரின் கையொப்பத்தை இடுதல் வேண்டும்.
2. கடிதத்தின் இடப்பக்கம் அனுப்புநர் என எழுதி, பெயரையும் முகவரியையும் எழுத வேண்டும்.
3. மதிப்பிற்குரிய ஐயா /அம்மா என விளித்து எழுத வேண்டும்.
4. பெறுநர் என எழுதி, வகுப்பாசிரியர், பள்ளி முகவரியை எழுத வேண்டும்.
5. இடம், நாள் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்.
6. விடுப்புக்கான காரணத்தையும் தேவையான நாள்களையும் தெளிவாக எழுத வேண்டும்.

ஈ) சரியா ( ✓ ) தவறா ( ✗ ) – குறியிடுக.

1. பள்ளிக்குக் காலம் தாழ்த்தி வருதல். ☐
2. விடியற் காலையில் துயில் எழுதல். ☐
3. நாள்தோறும் உடல், உடைகளைத் தூய்மை செய்தல். ☐
4. உண்ணும்போது உணவுப் பொருள்களைச் சிந்துதல். ☐
5. காலையிலும் மாலையிலும் நடைப் பயிற்சி செய்தல். ☐

உ) பின்வரும் காரணங்களுக்காக விடுப்பு விண்ணப்பம் எழுதுக.

உடல்நலமின்மை / ஊர்த் திருவிழா .

# 6. இறகும் இலையும் ஒன்று

கொங்குநாட்டு மன்னர், மக்களின் நிலைமையை அறிய மாறுவேடத்தில் புறப்பட்டார். செல்லும் வழியில் கடுமையான வெயில். அதனால், மன்னருக்குக் களைப்பும் நீர்வேட்கையும் ஏற்பட்டது. அருகிலிருந்த குளத்தை அடைந்து நீர்வேட்கையைத் தணித்துக் கொண்டார்.

குளத்தின் அருகே ஓர் ஆலமரம் இருந்தது. மன்னர் தம் களைப்பைப் போக்க, அந்த ஆலமரத்தின் நிழலில் தங்கினார். அப்போது அவ்வழியே மூன்று பெண்கள் வந்தனர்.

அம்மூவரில் ஒருத்தி, ஆலமரத்தைப் பார்த்தவாறே,“காலும் கழியும் ஒன்றடி” என்றாள். இரண்டாமவள், “இறகும் இலையும் ஒன்றடி”என்றாள். மூன்றாமவள், “வாயும் கனியும் ஒன்றடி” என்று பேசிக் கொண்டே மன்னரைக் கடந்து சென்றனர்.



மன்னருக்கு அவர்கள் எதைப் பற்றிப் பேசினார்கள் என்று விளங்கவில்லை. மன்னர் அரண்மனையை அடைந்தார். அமைச்சரை அழைத்தார்; வழியில் நிகழ்ந்தவற்றைக் கூறினார்.

“அந்த மூன்று பெண்களும் பேசியதன் பொருள் என்ன?” என்று கேட்டார். அதைக் கேட்ட அமைச்சர், மன்னரைப் பார்த்து,“மன்னர்மன்னா! நீங்கள் இளைப்பாறிய அந்த ஆலமரத்தில் கிளி ஒன்று இருந்ததா?” என்று கேட்டார்.

மன்னரும் “ஆம்! கிளி ஒன்று அந்த மரத்தின்மேல் அமர்ந்திருந்தது. அது ’கீச் கீச்’ என்று கத்தியது” என்று கூறினார். அமைச்சர், “அந்தப் பெண்கள் கிளியையும் ஆலமரத்தையும் ஒப்பிட்டுத்தான், இப்படிக் கூறியிருத்தல் வேண்டும்” என்றார்.

“எப்படி ?” என்று மன்னர் வினவினார்.

முதல்பெண், கிளியின் காலையும் ஆலமரத்தின் கிளையையும் ஒப்பிட்டுக், “காலும் கழியும் ஒன்றடி” என்று கூறியிருத்தல் வேண்டும்.

இரண்டாமவள், கிளியின் இறகையும் ஆலமரத்தின் இலையையும் ஒப்பிட்டு, “இறகும் இலையும் ஒன்றடி” என்று கூறியிருத்தல் வேண்டும்.

மூன்றாமவள், கிளியின் அலகையும் ஆலமரத்தின் பழத்தையும் ஒப்பிட்டு, “வாயும் கனியும் ஒன்றடி” என்று கூறியிருத்தல் வேண்டும் என்று விளக்கினார்.

அமைச்சரின் விளக்கத்தைக் கேட்ட மன்னர், அப்பெண்களின் அறிவுக் கூர்மையை எண்ணி மகிழ்ந்தார்.

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. கழி ____________
2. கனி ____________
3. நீர்வேட்கை ____________
3. தணிக்க ____________

### ஆ) பிரித்து எழுதுக.

1. அருகிலிருந்த ____________
2. அமர்ந்திருந்தது ____________
3. கூறியிருத்தல் ____________
4. அவ்வழியே ____________

### இ) கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. மன்னர், மக்களின் நிலையை அறிய ______________________ சென்றார்.
2. மன்னருக்குக் களைப்பும் ______________________ ஏற்பட்டது.
3. குளத்தின் அருகே ஓர் ____________________________ இருந்தது.
3. ஆல மரத்தின் மேல் ____________________ ஒன்று அமர்ந்து இருந்தது.
4. அந்தப் பெண்கள் ____________ யும் ______________ யும் ஒப்பிட்டுத்தான் கூறியிருத்தல் வேண்டும்.

ஈ) விடை எழுதுக.

1. மன்னர் எதற்காக மாறுவேடத்தில் சென்றார் ?
2. இறகும், இலையும் ஒன்றடி – விளக்குக.
3. அமைச்சர் மன்னரிடம் என்ன கேட்டார் ?
4. மன்னர் மகிழ்ச்சி அடையக் காரணம் என்ன ?

உ) புதிர்களுக்கான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அஞ்சல் பெட்டி, கதிரவன், நெருப்பு, பம்பரம், கொசு.

1. ஒற்றைக் காலில் சுற்றுவான் ஓய்ந்து போனால் படுத்திடுவான். அவன் யார் ? ____________
2. சுட்டெரிக்கும் விளக்கு; அணைக்க முடியாத விளக்கு; சாயுங்காலம் வந்தால் அணையும் விளக்கு. அஃது எது ? ____________
3. சின்னத் தம்பி; சிவப்புத் தம்பி; திறந்த வாய் மூடாத நல்லதம்பி. அவன் யார் ? ____________
4. பாட்டுப் பாடவா! பாய்ந்து கடிக்கவா! ஓடிப்போகவா! உயரப் பறக்கவா! நான் யார் ? ____________
5. தாளைக் கொடுத்தால் தின்பான்; தண்ணீர் கொடுத்தால் மடிவான். அவன் யார் ? ____________

ஊ) பெயர்ச்சொல்லின் இறுதியில் 'கள்' – சேர்த்துப் பன்மையாக்குக.

(எ.கா.) குருவி வானில் பறக்கும்.

குருவிகள் கூட்டம் கூட்டமாய்ப் பறக்கும்.

1. உருவத்தில் பெரியது யானை.

____________ கூட்டம் கூட்டமாய் வாழும்.

2. தனி மரம் தோப்பாகாது.

காட்டில் பலவகை ____________ காணப்படும்.

எ) மாணவர்கள் வட்டமாக அமர்ந்து கொள்க. ஒவ்வொருவரும் ஒரு தொடரைக் கூறி கதை உருவாக்குக.

ஏ) படங்களைப் பார்த்துப் பொருத்தமானவற்றை ஒப்பிட்டு எழுதுக.
(எ.டு.)




இறகும் இதழும் ஒன்றே.







ஐ) படத்தைப் பார்த்துப் புதிர் அமைக்க.
(எ.கா.)

மூன்று கண் இருக்கும்
உச்சியில் குடுமி இருக்கும்
உடைத்தால் அழுவேன். —நான் யார் ?







## விளையாடலாம் வாங்க!

இரு குழுவாகப் பிரிந்து கொள்க. ஒரு குழு ஒரு விடுகதை சொல்க. அதற்கான விடையை மற்றொரு குழு சொல்க. சரியான விடையைச் சொன்ன குழுவிற்கு மதிப்பெண் இடுக. குழுமாற்றிச் செயலைத் தொடர்க. அதிக மதிப்பெண் பெற்ற குழு வெற்றி பெற்றதாக அறிவித்துப் பாராட்டுக.

## செயல் திட்டம்

உன் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் புதிர்களைக் கேட்டு எழுதி வருக.

## தெரிந்துகொள்வோம்

### காலங்கள்

தமிழில் உள்ள சொற்களை நான்கு வகையாகப் பாகுபடுத்துவர்.

அவை: பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

இதில் வினைச்சொல் காலத்தைக் காட்டும்.

காலம் மூவகைப்படும். அவை:

1. இறந்தகாலம் 2. நிகழ்காலம் 3. எதிர்காலம்

(எ.டு.) 1. நான் நேற்றுத் தேர்வு எழுதினேன். (இறந்தகாலம்)

2. தம்பி படிக்கிறான். (நிகழ்காலம்)

3. நான் நாளை ஊருக்குச் செல்வேன். (எதிர் காலம்)

பின்வரும் சொற்களை வகைப்படுத்துக.

எழுந்தான், படிக்கிறாள், வருவார், ஓடினான், பாடுவேன், உண்கிறான், தேடுவார், நடிக்கின்றான், கற்றாள்

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| ------------- | ------------- | ------------- |
| ------------- | ------------- | ------------- |
| ------------- | ------------- | ------------- |

# 7. பொம்மை உலகம்








தமிழ்நாட்டில் உள்ள பழைமையான நகரங்களுள் ஒன்று சேலம். இந்நகரம் தமிழர்களின் கலை இலக்கியப் பண்பாட்டுச் சின்னமாக விளங்கி வருகிறது. முக்கனிகளில் ஒன்றான மாம்பழத்திற்குப் புகழ் பெற்றது. மதன், இந்நகரில் நடைபெறும் பொருட்காட்சிக்குத் தன் பெற்றோருடன் சென்றான்.

பொருட்காட்சியில் சிறுவர் அரங்கு அமைக்கப்பட்டு இருந்தது. மூவரும் அதனுள் நுழைந்தனர். 'பொம்மை உலகம் உங்களை வரவேற்கிறது' என்னும் அறிவிப்புப்பலகை அவர்களை வரவேற்றது. உள்ளே அழகழகான பொம்மைகள் வகைப்படுத்தி வைக்கப்பட்டு இருந்தன.

அவற்றைப் பார்த்த மதன், 'எத்துணை அழகான பொம்மைகள்' என்று வியந்து மகிழ்ந்தான். அவனது வியப்பைக் கண்ணுற்ற தந்தை, "பொம்மைகளைக் கண்டு, மயங்காத குழந்தைகளும் உண்டோ?" என்றார். அதற்கு, அவனுடைய தாய், "பொம்மைகளில் உனக்குப் பிடித்ததைக் காட்டு, வாங்கித் தருகிறேன்" என்றார்.



மதன், "அம்மா! அதோ பாருங்கள். தஞ்சாவூர்த் தலையாட்டிப் பொம்மைகள்" என்றான்.

"ஆம். அவை உலகப் புகழ் பெற்றவை. தலையை மட்டும் ஆட்டிக் கொண்டிருக்கும் பெண் பொம்மையும் தஞ்சாவூர்ப் பொம்மைதான்" என்றாள் அம்மா.



மரப் பொம்மைகள் உள்ள பகுதிக்குச் சென்றனர். அங்கு இரண்டு கிளிகள் உரையாடுவது போன்ற மரப்பொம்மை, அவர்களை வெகுவாகக் கவர்ந்தது. மதன் மரத்தாலான நாய்ப்பொம்மையை எடுத்து நகர்த்தினான். "இந்தப் பொம்மையை எங்கு வேண்டுமானாலும் இழுத்துச் செல்லலாம். கால்களுக்கு மாற்றாகச் சக்கரங்கள் பொருத்தப்பட்டு உள்ளன" என்றான். அப்பகுதியில் மரத்தாலான யானைப் பொம்மைகள், 'மரப்பாச்சிகள்' ஆகியவற்றைக் கண்டுகளித்தனர்.



அடுத்த பகுதியில், நெகிழியால் செய்யப்பட்ட வண்ணவண்ணப் பொம்மைகள் அரங்குக்குப் பொலிவூட்டின. நாய், குதிரை, யானை, ஒட்டகச்சிவிங்கிப் பொம்மைகள் உண்மையான விலங்குகள் போலவே காட்சியளித்தன. தாளம்போடும் பொம்மை, கைத்தட்டும் பொம்மை, நடனம் ஆடும் பொம்மைகள் என எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே, துணிப் பொம்மைகள் உள்ள பகுதிக்குச் சென்றனர்.









துணியால் செய்யப்பட்ட கரடி, கிளி, மைனா, பூனை முதலிய பொம்மைகளைப் பார்த்து மகிழ்ந்தனர். மதன், “இதுபோன்று பொம்மைகளை நாமும் செய்யலாமா” என்றான். தந்தை, “நாமும் செய்யலாம். பொம்மைகளைச் செய்யும்பொழுது நமது கைகளும், மனமும் இணைந்து செயல்படும். அதனால், கற்பனை ஆற்றல் பெருகும். மனத்தில் மகிழ்வு ஏற்படும் " என்றார்.

அழகான குதிரைப் பொம்மைகளைப் பார்த்தனர். “எங்கள் ஊரில் ஆள் உயரக் குதிரை உருவங்களைக் களிமண்ணால் செய்வர். அவை கரையாமல் இருக்கச் சூளையில் இட்டுச் சுடுவர். அவற்றின்மீது வண்ணங்களைப் பூசி அழகுபடுத்துவர். இக்குதிரைகளை ஊர் மக்கள் மேளதாளம் முழங்க, தோளில் சுமந்து செல்வர். ஊர் எல்லையில் உள்ள ஐயனார் கோவிலில் நேர்த்திக்கடனாக வைப்பர். இதற்குப் ‘புரவி எடுப்பு விழா’ என்று பெயர் ” என்றார் அம்மா.





மூவரும் பேசிக்கொண்டே மகளிர் சுய உதவிக் குழுவினர் செய்து வைத்திருந்த பொம்மைகள் பகுதிக்குச் சென்றனர். துணி, பஞ்சு, பனை ஓலை ஆகியவற்றைக் கொண்டு பூனை, எலி, குருவி, கிளி, குதிரைப் பொம்மைகளைச் செய்திருந்தனர். மெழுகு, தோல், கடல்சிப்பி ஓட்டிலிருந்து உருவாக்கப்பட்ட பொம்மைகளும் அரங்கில் நிறைந்திருந்தன. மதனுக்குப் பிடித்த சில பொம்மைகளை வாங்கினர். பொம்மை உலகத்தைக் கண்ட மகிழ்வுடன் வீடு திரும்பினர்.

## பயிற்சிகள்

### அ) அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. சூளை ____________
2. பொலிவு ____________
3. சின்னம் ____________
4. புரவி ____________

### ஆ) சேர்த்து எழுதுக.

1. மூன்று + கனி ____________
2. நிறைந்து + இருந்தன ____________
3. மா + பழம் ____________
4. மரம் + பொம்மை ____________
5. இ + குதிரை ____________
6. வானொலி + பெட்டி ____________

### இ) பிரித்து எழுதுக .

1. மாநகரம் ____________
2. நாய்ப்பொம்மை ____________
3. தலையாட்டி ____________
4. தொலைவிலிருந்து ____________
5. பனையோலை ____________
6. பொருட்காட்சி ____________

### ஈ) கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. மாம்பழத்திற்குப் புகழ் பெற்ற நகரம் ____________
2. பொம்மைகளைக் கண்டு மயங்காத ____________ உண்டோ ?
3. நாய்ப்பொம்மையில் கால்களுக்கு மாற்றாக____________ உள்ளன.
4. குதிரை உருவங்கள் ________ செய்யப்படுகின்றன.
5. பொம்மைகளைச் செய்வதால் ____________ ஆற்றல் பெருகும்.

உ) விடை எழுதுக.

1. சிறுவர் அரங்கில் இருந்த அறிவிப்புப் பலகையில் எழுதப்பட்டிருந்த சொற்றொடர் யாது ?
2. உலகப் புகழ்பெற்ற பொம்மைகள் எவை ?
3. பொருட்காட்சியில் இடம்பெற்றிருந்த மரப்பொம்மைகள் எவை ?
4. துணியால் செய்யப்பட்டிருந்த பொம்மைகள் யாவை ?
5. புரவி எடுப்பு என்றால் என்ன ?
6. மகளிர் சுயஉதவிக் குழுவினர் எவற்றைப் பயன்படுத்தி பொம்மைகள் செய்திருந்தனர் ?
7. நீ எந்தெந்தப் பொருள்களைப் பயன்படுத்தி பொம்மைகள் செய்வாய் ?

ஊ) முடியும் எழுத்தில் தொடங்குக.

(எ.கா.) வடமதுரை
மதுரைக்காஞ்சி
காஞ்சிப்பட்டு
பட்டுக்கோட்டை
கோட்டைவாசல்
வாசல் கதவு.

சிட்டுக்குருவி
குருவி........... ..................................................

தென்மேற்கு
மேற்கு............. ..................................................

எ) சொற்களை இணைத்துச் சொல் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| தேன் | குதிரை | 1. தேன்கூடு |
| மூங்கில் | உலகம் | 2.__________ |
| பொம்மை | கறி | 3.__________ |
| மண் | கூடு | 4.__________ |
| காய் | காட்சி | 5.__________ |
| கண் | கூடை | 6.__________ |

ஏ) ஒரு சொல் பல பொருள் – எழுதுக.

(எ –டு)

அடி – காலடி, அடித்தல், பாடலடி

ஆறு – ------, ------, ------

படி – ------, ------, ------

ஐ) பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தேனீக்கள் மலைப் பொந்துகள், மரக்கிளைகள், கோபுரங்களின் இடுக்குகள் போன்ற இடங்களில் கூட்டை அமைத்துக் கொள்கின்றன. தேனீக் குடும்பத்தில் இராணித் தேனீ, ஆண்தேனீ, வேலைக்காரத் தேனீ ஆகிய மூவகைத் தேனீக்கள் உள்ளன. வேலைக்காரத் தேனீக்களே தேன் எடுத்தல்,



கூட்டைக் காத்தல், தேனடை கட்டுதல் போன்ற வேலைகளைச் செய்கின்றன. ஒரு கூட்டில் ஓர் இராணித் தேனீ மட்டுமே இருக்கும். மற்றோர் இராணித் தேனீ அக்கூட்டில் தோன்றினால், அது தனக்கு வேண்டிய வேலைக்காரத் தேனீக்கள், ஆண் தேனீக்கள் ஆகியவற்றைச் சேர்த்துக்கொண்டு அக்கூட்டைவிட்டு வெளியேறும். வேறு ஒரு புதிய தேன்கூட்டை அமைத்துக்கொண்டு வாழத் தொடங்கும்.

1. தேனீக்கள் தங்கள் கூட்டை எங்கெங்கே அமைத்துக்கொள்கின்றன ?
2. மூவகைத் தேனீக்கள் எவை ?
3. வேலைக்காரத் தேனீக்களின் வேலைகள் யாவை ?
4. தேன் கூட்டில் மற்றோர் இராணித்தேனீ தோன்றினால் என்ன நிகழும் ?

## செயல் திட்டம்

களிமண், துணி, பஞ்சு முதலிய பொருள்களைப் பயன்படுத்தி நீ விரும்பும் பொம்மைகள் செய்து வகுப்பறையில் கண்காட்சி அமைக்க.

# 8. திருக்குறள்

## செய்ந்நன்றி அறிதல்

1. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

பொருள் : நமக்குப் பிறர் செய்த உதவியை நாம் மறக்கக்கூடாது. ஆனால், பிறர் நமக்குச் செய்த தீமையை உடனே மறந்துவிடுவது நல்லது.

## ஒழுக்கமுடைமை

2. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

பொருள் : நல்ல ஒழுக்கம் பல நன்மைகளைத் தரவல்லது. தீய ஒழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே தரும்.

சொல்பொருள் :

இடும்பை – துன்பம்.

## பயனில சொல்லாமை

3. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

பொருள்: பயன்தரக்கூடிய சொற்களையே நாம் பேசுதல் வேண்டும். பயன்தராத சொற்களைப் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

சொல்பொருள் :

பயனிலா – பயன்தராத.

## வாய்மை

4. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

பொருள்: மனம் அறிந்து ஒருவர் பொய் கூறுதல் கூடாது; அவ்வாறு கூறினால், அவர் மனமே அவரை வருத்தமடையச் செய்யும்.

சொல்பொருள்:

சுடும் – வருத்தும்.

### வெகுளாமை

5. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

பொருள் : ஒருவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பினால் தன் சினத்தை அடக்கிக்கொள்ளுதல் வேண்டும்; அடக்கிக் கொள்ளாவிடில், அந்தச் சினமே அவரை அழித்து விடும்.

சொல்பொருள் :

காவாக்கால் – அடக்காவிடில்.

### தெரிந்து செயல்வகை

6. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

பொருள் : ஒரு செயலைச் செய்வதற்குமுன் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்தல் வேண்டும். செயலைத் தொடங்கியபின்பு அதனைப் பற்றிச் சிந்திக்கலாம் என நினைப்பது குற்றத்தைத் தரும்.

சொல்பொருள்:

கருமம் – செயல்

இழுக்கு – குற்றம்.

### தெரிந்து தெளிதல்

7. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

பொருள் : ஒருவரிடத்தில் உள்ள நல்ல பண்புகளையும் தீய பண்புகளையும் ஆராய்தல் வேண்டும். எப்பண்பு மிகுதியாக உள்ளதோ அப்பண்பின் அடிப்படையில், அவர் நல்லவரா, தீயவரா எனத் தெளிதல் வேண்டும்.

சொல்பொருள்:

மிகை – மிகுதி

நாடி – ஆராய்ந்து.

ஊக்கமுடைமை

8. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

பொருள் : நீரில் உள்ள மலர்களின் தண்டானது நீர் உயரத்திற்கு ஏற்ப நீளும். அதுபோல, ஒருவனது மனஉறுதிக்கு ஏற்பவே, அவனது வாழ்க்கையும் உயரும்.

சொல்பொருள் :

வெள்ளம் – நீர்

நீட்டம் – நீளம்.

ஆள்வினை உடைமை

9. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

பொருள் : முயற்சி செல்வத்தை மேலும் மேலும் பெருக்கும்; முயற்சி இல்லாமை வறுமை அடையச் செய்யும்.

சொல்பொருள்:

திரு – செல்வம்

இன்மை – வறுமை.

சான்றாண்மை


10. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

பொருள்: தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையே செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், நல்ல குணத்தினால் பயன் ஒன்றும் இல்லை..

சொல்பொருள்:

இ ன்னா – துன்பம்

சால்பு – நல்ல குணம்.



நூல்குறிப்பு : திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. 133 அதிகாரங்களைக் கொண்டது. 1330 குறட்பாக்களை உடையது. இந்நூல், உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான அறநெறிகளை எடுத்துக் கூறுகிறது. ஆதலால் இந்நூல், 'உலகப் பொதுமறை' என அழைக்கப் பெறுகிறது. இதனை இயற்றியவர் திருவள்ளுவர்.

## பயிற்சிகள்

### 1. பிரித்து எழுதுக.

1. நன்றன்று = ______
2. வித்தாகும் = ______
3. சினங்காக்க = ______
4. உள்ளத்தனைய = ______

### 2. சேர்த்து எழுதுக.

1. தன் + நெஞ்சு = ______
2. தீ + ஒழுக்கம் = ______
3. பயன் + உடைய = ______
4. தன்னை + தான் = ______

### 3. விடை எழுதுக.

1. எதனை உடனே மறத்தல் வேண்டும் ?
2. எப்பொழுதும் துன்பம் தருவது எது ?
3. தன்னெஞ்சே தன்னைச் சுடும். ஏன் ?
4. ஏன் சினத்தை அடக்குதல் வேண்டும் ?
5. எப்படிப்பட்ட சொற்களைப் பேசுதல் வேண்டும் ?
6. ஒருவரது வாழ்வு எதற்கு ஏற்ப உயரும் ?
7. நல்ல குணம் உடையவர் எவ்வாறு நடந்துகொள்ளுதல் வேண்டும் ?

### 4. முதல் எழுத்தை மாற்றி வேறு வேறு சொல்லாக்குக.

சுடு – படு ______

நாடி – ஓடி ______

சொல் – நில் ______

### 5. கோடிட்ட இடத்தை நிரப்புக.

எண்ணித் துணிக ______

தன்னெஞ் சறிவது ______

முயற்சி திருவினை ______

# 9. சின்னராசா கண்ணுறங்கு !

(தாலாட்டு)



ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ

தினை வெரைக்கும் கொல்லையிலே – கண்ணே
தேரோடிப் போகுதப்பா
மலைப் பிஞ்சிக் கொல்லையிலே – கண்ணே
மானோடிப் போகுதப்பா (ஆராரோ ஆரிரரோ)

பட்டு விரித்த மெத்தையிலே – கண்ணே
படுத்துமே நீயுறங்கு
சிட்டுக்குருவி பாடிவரக் – கண்ணே
சின்னராசா நீயுறங்கு (ஆராரோ ஆரிரரோ)

பச்சைக்கிளி பக்கத்திலே – கண்ணே
பாலுஞ்சோறுங் கிண்ணத்திலே
பாலும் பலவகையாம் – கண்ணே
பாலகனே உண்டுறங்கு. (ஆராரோ ஆரிரரோ)

– நாட்டுப்புறப் பாடல்.

## சொல்பொருள்:

| | | |
|---|---|---|
| மலைப்பிஞ்சி | – | குறுமணல் (வேலூர் மாவட்ட வழக்கு) |
| தினை | – | மலைப்பயிர் |
| கொல்லை | – | புன்செய் நிலம் |
| உறங்கு | – | தூங்கு |
| பாலகன் | – | ஆண் குழந்தை |

## பயிற்சிகள்

### அ) பிரித்து எழுதுக.

1. தேரோடி –
2. நீயுறங்கு –
3. மானோடி –
4. உண்டுறங்கு –

### ஆ) விடை எழுதுக.

1. தேர் எதன் வழியாகப் போகிறது ?
2. மான் ஓடும் கொல்லை எது ?
3. குழந்தை, எந்த மெத்தைமேல் உறங்க வேண்டும் எனத் தாய் வேண்டுகிறாள் ?
4. தாலாட்டுப் பாடலின் கருத்தை எழுதுக.

### இ) பேச்சு வழக்குச் சொல்லை, எழுத்து வழக்குச் சொல்லாக மாற்றுக.

1. வெரைக்கும் ----------------------
2. போகுது ----------------------
3. போகுதப்பா ----------------------

### செயல் திட்டம்

1. உன் ஊரில் உள்ள பெரியோர்களிடம் நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டு எழுதி வருக.

# 10. அகரமுதலி

| | |
|---|---|
| அஞ்சி | – பயந்து |
| அரங்கு | – கூடம் |
| அறிஞர் | – அறிவில் சிறந்தவர் |
| ஆணை | – கட்டளை |
| இராப்பொழுது | – இரவு |
| ஏளனம் | – இகழ்ச்சி |
| ஒருங்கே | – ஒன்றாக |
| கதிரவன் | – சூரியன் |
| கழி | – மரக்கிளை |
| கனி | – பழம் |
| குப்பம் | – மீனவர் வாழிடம் |
| கேடு | – கெடுதல் |
| கொந்தளி | – பொங்கியெழு |
| கோ | – அரசன் |
| சின்னம் | – அடையாளக் குறியீடு |
| சுள்ளி | – காய்ந்த சிறுவிறகு |
| சூளை | – மண்பாண்டம் சுடும்இடம் |
| சூழ்ச்சி | – தந்திரம் |
| செப்பம் | – திருத்தம் |
| செவி | – காது |
| சொட்டு | – மிகக் குறைந்த அளவு |
| தட்டம் | – தட்டு |
| தணிக்க | – குறைக்க |
| திங்கள் | – மாதம் |
| பட்டறிவு | – அனுபவ அறிவு |
| புரவி | – குதிரை |
| பெரியார் | – முதியவர், அறிவில் சிறந்தவர் |
| பொலிவு | – அழகு |
| பொருள் | – செல்வம் |
| மன்னவன் | – அரசர் |
| மெய் | – உண்மை |
| வருணனை | – விவரிப்பு |
| விளித்து | – அழைத்து |
| வெள்ளம் | – நீர் |